<u>**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**</u>

<u>**CC No. 390 /2019**</u>

<u>**DEPOSITION OF WITNESS**</u>
<u>**(Chapter XXIII Code of Criminal Procedure)**</u>

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 1 |
| Name | : செல்வம் |
| Father/Husband's Name | : சொக்கத்தேவர் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.07.2023.

Accused present.

<u>**முதல் விசாரணை–**</u>

நான் தற்போது காட்டங்குளத்தூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். கடந்த 2018 சம்பவத்தின் போது செங்கல்பட்டு கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். 10.8.2018 அன்று அதிகாலை 4 மணியளவில் எனக்கு போன் மூலம் விபத்து சம்மந்தமாக ஒரு செய்தி வந்தது. அது செங்கல்பட்டு ரயில்நிலையத்திற்கு அருகில் ஜிஎஸ்டி ரோட்டில் சுமார் 60 வயது மதிக்கத்தக்க பெண்ணிற்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் வந்தது. அங்கு நான் சென்றபோது உயிருடன் இருந்தார். அவரை செங்கல்பட்டு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பிவைத்தேன். அங்கிருந்து அவர் மேற்சிகிச்சைக்காக ராஜுவ்காந்தி மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

இரண்டு நாட்கள் கழித்து 12.8.2018 போலிசாரிடமிருந்து அந்த பெண்மணி இறந்துவிட்டதாக தகவல் வந்தது. இது சம்மந்தமாக நகர காவல்நிலையத்திற்கு சென்று புகார் அளித்தேன். என்முன்பு காட்டப்படும் ஆவணம் நான் கொடுத்த புகார் தான். **அந்த புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன்பிறகு நான் விசாரித்தபோது அந்த பெண்மணியின் அஞ்சலை என்றும் அவர் கணவர் பெயர் வையாபுரி , கடலூர் மாவட்ட பன்ருட்டி தாலுக்கா என்றும் தெரியவந்தது. விபத்தானது ஆட்டோ இடித்ததால் ஏற்பட்டது என தெரியவந்தது. அவருடன் ஒரு பெண்மணியும் வந்ததாக தெரிந்துகொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

அவருடன் வந்த பெண்ணிற்கும் அடிபட்டிருந்தது, அவரையும் நான் தான் மருத்துவமனைக்கு சென்று சேர்த்தேன். அவருக்கு சுமார் 60 வயதிருக்கும். அவர் செங்கல்பட்டில் இருந்து சிகிச்சை பெற்று கடலூருக்கு சென்று தான் இறந்த பெண்மணியை பற்றி கூறியுள்ளார். போலிசார் விபத்து ஏற்பட்டது என்று கூறிய அன்றைய தினமே விசாரணைக்கு சென்றுவிட்டேன். 12.8.2018 அன்று இறந்த பெண்மணியின் அஞ்சலை அவர் கணவர் பெயர் ஆகியவை தெரியவந்தது. நான் கொடுத்த புகாரில் 14.8.2018 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு இறந்த பெண்மணியின் விவரம் தெரிந்திருந்தும் 14.8,2018 அன்று கொடுத்த புகாரில் விலாசம் தெரியாத பெண்மணி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். போலிசார் அந்த பெண்மணி விபத்துக்குள்ளானது சம்மந்தமாக பெயர் கொடுக்க தெரியாததால் நான் புகாரை கொடுத்தேன். அடிபட்ட நபரை நான் ஆம்புலன்சில் ஏற்றியதாக குறிப்பிட்டுள்ளேன். ஆனால் புகாரில் ஆட்டோவில் ஏற்றி அனுப்பியதாக

கூறியுள்ளேன் என்ற்◌ால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./-R.Reena
Judicial Magistrate No.I,
Chengalpattu.

**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 390 /2019**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 2 |
| Name | : குமார் |
| Father/Husband's Name | : வையாபுரி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.07.2023.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது கொத்தனார் வேலை செய்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன நபர் என் தாயார் ஆவார். கடந்த 9.8.2018 அன்று எங்கள் ஊரான சின்னசேமக்கோட்டையிலிருந்து இரவு 9 மணிக்கு என் அம்மாவும் மங்கவரதாவும் எனது தங்கை புஷ்பாவை பார்ப்பதற்காக சென்னைக்கு பஸ்சில் சென்றபோது வழிதெரியாமல் செங்கல்பட்டில் இறங்கி வழி தெரியாமல் நடந்து வந்தபோது ஆட்டோ மோதி விபத்து ஏற்பட்டது என இரண்டு நாட்கள் கழித்து மங்கவர்தாவின் சொந்த உறவினர் மூலம் தெரிந்து, செங்கல்பட்டு நகர காவல்நிலையத்திற்கு வந்து அதன்பிறகு சென்னை ராஜுவ்காந்தி

மருத்துவமனை சவக்கிடங்கில் பார்த்தேன். அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

என்னுடைய அம்மாவிற்கு எந்த தேதி , நேரம் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. உறவினர்கள் சொன்னதன் பேரில் சென்னைக்கு சென்று மருத்துவமனையில் வைக்கபட்டிருந்த என் அம்மாவின் சடலத்தை பார்த்தேன். இந்த வழக்கில் எனக்கு நேரடியாக தெரியாது.

**மறுவிசாரணை–** இல்லை.

Typewritten to my dictation in open
court read over to the witness in Tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

Sd./-R.Reena
Judicial Magistrate No.I,
Chengalpattu.